தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1980 ஜூலை 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன்காப்பு''.

ஏர் உழுதலைக் காட்டிலும், எருவிடுதல் நல்லது. களை எடுத்த பிறகு நீர்ப்பாசனத்திற்கு ஆவன செய்வது தக்கது. பயிர் அழியவொட்டாமல் காப்பது அதனினும் மேலாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 56, 57 மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வேலூர் முத்துரங்கம் கலைக் கல்லூரி.

*வினா எண். 58—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் வேலூர் முத்துரங்கம் கலைக்கல்லூரியில் பட்ட மேல்படிப்பு (M.A., M.Sc.) போன்ற வகுப்புகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ. (M.A.) எம்.எஸ்ஸி. (M.Sc.) வகுப்புகள் ஆரம்பிக்க கருத்துரு ஏதும் இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட மேல்படிப்பு துவங்குவதற்கான கருத்துரு இல்லை என்று கூறினார்கள். வட ஆற்காடு

மாவட்டத்திலே அரசினர் கலைக் கல்லூரிகளிலே இப்படிப்பட்ட மேல் பட்டப்படிப்பு இல்லை. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது துவங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வணிக இயல் மேல் பட்டப் படிப்பு அதாவது எம்.காம்., துவங்கப்பட இருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற மேல் பட்டப் படிப்பு துவங்க வேண்டுமானால், அதற்கான புரபோசலை முன்னதாக யூனிவர்சிடிக்கு அனுப்பிப்பெற, அதற்கான கருத்துருகளை அந்தந்தக் கல்லூரியின் தலைவர்கள் செய்ய வேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர்கள் மேல்நிலை பட்டப் படிப்பு படிக்க சென்னை மற்றும் சிதம்பரம் போன்ற இடங்களுக்குப் போகவேண்டியிருப்பதால், வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டே துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி இல்லையென்றால், அடுத்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் பயன்பெறுகின்ற அளவுக்கு அங்கே இந்த எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிப்புகளை கல்லூரிகளில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தெந்த கல்லூரிகள் முன் வருகின்றவோ, அந்தந்த கருத்துருவின் அடிப்படையிலே பல்கலைக்கழகம், அரசு பரிசீலித்து மேல்நிலைப்பட்டப்படிப்புகளைத் துவக்குகின்றது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த அரசினர் கல்லூரிகளில் எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டப்படிப்பைத் துவக்குவதற்கு யூனிவர்சிடிக்கு ஏற்கனவே கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது? இனிமேல் அனுப்ப என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், சம்பந்தப்பட்ட துறையினர் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும். அதை பல்கலைக்கழகம் பரிசீலனை செய்து அரசு அதற்கு ஆதரவாக உத்தரவுகளைப் போடும்.